மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.11,60,000 நஷ்ட ஈடு என்று சொல்லியிருக்கிறீர்கள். கோடிக்கணக்கான அளவிலே நஷ்டம் வந்திருக்கிறது. நீங்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்து முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடும்—இடர் இழப்புக்கு அவர்கள் பொறுப்பாக இருக்கிறார்கள்—நீங்கள் எல்லாம் கலந்து பேசி நல்ல தொகையை அந்த மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

(ஐ) வலங்கைமான் தொகுதி, செண்பகபுரத்தில் மின்சாரம் தாக்கி இறந்த மாணவன் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை கன மழை பெய்தபோது, மின்சாரம் தாக்கப்பட்டு, தஞ்சை மாவட்டம், வலங்கைமான் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த செண்பகபுரம் பகுதியில் வசிக்கும் ஜெயக்குமார் என்ற கல்லூரி மாணவன் இறந்து விட்டார். புல் அறுக்கத் தன் வயலுக்குச் சென்றபோது, கடந்த கன மழையில் அறுந்து விழுந்த மின்சாரக் கம்பியை மிதித்து இறந்துவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'மழையின்போது இறந்த மக்களுக்கு நிவாரண நிதி வழங்கப்படும்' என்று அறிவித்தார்கள். அந்த மாணவரின் குடும்பத்திற்கு அந்த நிவாரண நிதி கிடைக்கச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அங்கு மின்சார ஒயர் அறுந்து, கிட்டத்தட்ட 10, 15 நாட்களுக்கு மேல் குடிநீர் இல்லாமல் பாதிக்கப்பட்டு, அந்தக் கிராமமே இருளில் சூழ்ந்திருந்தது. அந்தச் சமயம்தான் அந்த மாணவன் இறந்தான். எனவே, அவருடைய குடும்பத்திற்கு நிவாரணம் கிடைக்க உதவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

2009 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன் எழுப்பிய இந்தப் பிரச்சினையில், செண்பகபுரம் பகுதியைச் சார்ந்த ஜெயக்குமாரைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்கள். பொதுவாக, யார் இப்படிப்பட்ட மின்சாரத் தாக்குதலுக்கு ஆளாகியிருந்தாலும், 25 ஆயிரம் ரூபாய் நிதியை உடனடியாக வழங்குவது என்று மின்சார வாரியத்திலே ஒரு சட்டம் இருக்கிறது. அந்த 25 ஆயிரம் ரூபாய் இதுவரையில் கிடைக்கவில்லை என்றால், உடனே வழங்கப்படும். சில நேரங்களிலே, இந்தத் தொகை மிகவும் குறைவு என்று நினைக்கின்றவர்கள், நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். நீதிமன்றத்திலே அவர்களுடைய வயது, அவர்களுடைய தகுதி, அவை அனைத்தையும் கவனித்து, அவர்களுக்குக் கூடுதலாகக்கூட நிதி வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 25 ஆயிரம் ரூபாயை உடனடியாகப் பெற்றுக்கொண்டு—வேண்டுமானால், நீதிமன்றத்திற்குச் சென்று அப்பீல் செய்தால், நீதிமன்றத்தினுடைய உத்தரவுப்படி உரிய தொகையை நிச்சயமாக இந்த அரசு வழங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழையால் பாதிக்கப்பட்ட அந்தச் சமயத்தில்தான், அந்தப் பையன் இறந்தான். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்தச் சமயத்தில் இறந்த மக்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்; பின்பு 2 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஏழை, விவசாய மாணவன்; கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவன்; அந்தக் குடும்பத்திற்கு உதவிடும் வகையில், அருள்கூர்ந்து அந்த மாணவனின் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி கிடைக்க உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெள்ளம் பாதிக்கப்பட்ட நேரத்திலே இறந்ததாகச் சொல்கிறார். மாண்புமிகு முதல்வரோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலேயிருந்து ஏதாவது கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி (குறுக்கீடுகள்) ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுக்கப்பட்ட நிதியைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஜெயக்குமார் என்கிற மாணவர் குடும்பத்திற்கும் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

4. கவன ஈர்ப்பு

கடையநல்லூர் நகராட்சி, சொத்து வரி உயர்வினால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் மிக அதிகமாக சொத்து வரி விதிக்கப்படுவது குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் மிக அதிகமாக சொத்து வரி விதிக்கப்பட்டுள்ள சூழ்நிலை' குறித்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமான விவர அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.